**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீடுகளுடன் தொடர்புடைய வருமானக் கணக்கு என்பன தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் திணைக்களத் தலைவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 மே 30 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில்

எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| | | | - | - |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது | 1. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்பெறாமை | 2.1 |
| | | 2. | ‘‘மீகலாவ ஹரித பியஸ’’ பயிற்சி நிலையத்தில் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு திட்டமொன்று தயாரிக்கப்படாமை. | 2.3.1(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 3. பதவியணியினர் பயிற்சிக்கு திட்டமிடப்படாமை. | 2.10(ஆ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும். | 1. முறையானதொரு அங்கீகாரமின்றி வேலைக்கு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டமை. | 2.10(அ) |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | 1. கனவத்த மருத்துவ பூங்காவிலுள்ள இரண்டு மாடிக் கட்டிடம் குறைப்பயன்பாட்டில் காணப்படுகின்றமை.<br>2. விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் | 2.3.1(அ)<br>2.3.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் | 1. வருமதியாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடுவதற்கு தவறியமை. | 2.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல். | | | |
| 128(1)(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 1. | ஆர்க்கிட் தாவர வீட்டின் வேலை பூர்த்தியாக்கப்படாமை | 2.2(அ) |
| | | 2. | ஹக்கல தாவரவியல் பூங்காவின் சிற்றுண்டிச்சாலையினை குத்தகைக்கு விட்டதில் ரூபா 526,500 நிதிசார் நட்டம். | 2.2(ஆ) |
| | | 3. | ரூபா 960,000 இற்கு 100 பாதுகாப்பு வலைச் சுருள்களின் கொள்வனவு மற்றும் அவற்றின் பயன்பாடின்மை. | 2.5 |
| | | 4. | கோல்ப் காரின் வருமானம் குறைவடைந்தமை. | 2.6(அ) |
| 128(1)(ஒ) | அவரின் வாக்குப்பணத்தின் பரப்பெல்லை மற்றும் வரம்புகளின் கீழ் வரும் ஏதேனும் செலவினம் அல்லது ஏற்பட்ட பொறுப்பு அல்லது ஏனைய அனுமதியளிக்கப்பட்ட நிதிசார் ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை போதிய அதிகாரத்தினால் அதிகாரமளிக்கப்படல். | 1. | ஏற்பாடுகளினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை. | 2.4(அ) |
| | | 2. | மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை. | 2.7 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராக அவர் பொறுப்பாகக் காணப்படுகின்ற செலவினத் தலைப்பொன்றின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் நிதி வருடத்தின் இறுதியில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஒதுக்கீட்டுக் கணக்கொன்று வழங்கப்பட்டுள்ளது. | 1. | பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படாமை | 2.4(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 128(2)(ஐ) | பொருளாதார மற்றும் ஏனைய சூழ்நிலைகளிலுள்ள மாற்றங்கள் தொடர்பில், தேவையானவிடத்து காலத்திற்குக் காலம் விகிதங்கள் மற்றும் கட்டணங்கள் ஏனையவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாவரங்களின் விற்பனையில் மீளமைக்கப்பட்ட விலைகளினை விநியோகிக்காமை காரணமாக நட்டங்கள் ஏற்பட்டமை. | 2.6(இ) |

**2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 செயலாற்றல்**

**எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்பெறாமை**

மருத்துவ செடிகள் மற்றும் மரங்களின் பராமரிப்பு மற்றும் உற்பத்தி மற்றும் செடிகளின் விநியோகத்திற்கான பயிற்சி நிலையமொன்றாக 2008 ஆம் ஆண்டில் ''மீகலாவ ஹரித பியஸ'' பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அண்ணளவாக 8 ½ வருடங்கள் காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் எவ்வித பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் தாவர வளர்ப்பிற்கான பயிற்சி நிகழ்ச்சியொன்று மாதம் ஒரு தடவை நடாத்தப்பட்டிருந்தது.

**2.2 பெறுகை நடைமுறையினூடாக விநியோக மற்றும் சேவைகளினைப் பெற்றுக்கொள்ளுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் வறப்பஹா தாவரவியல் பூங்காவில் பார்வையாளர்களின் வசீகரத்தை அதிகரிக்கும் நோக்கொன்றுடன் ரூபா 15.85 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 2013 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவொன்றின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் ஆர்க்கிட் பயிரிடுதல் வீடொன்றின் நிர்மாணத்திற்கான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 ஒக்டோபர் 09 வரையிலும் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 2.39 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் ஹக்கல தாவரவியல் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சிற்றுண்டிச்சாலை ஊழியர் நலன்புரி சமூகத்தினால் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. விலைமனு அழைப்பிதழ் அத்துடன் பொருத்தமான விலைமனுதாரின் தெரிவு சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 802,500 மற்றும் ரூபா 625,750 ஆக சமர்ப்பிக்கப்பட்ட அந்த விலைமனுக்கள் நலன்புரி சமூகத்தின் அரசியலமைப்புடன் இணங்கியிருக்கவில்லை என குறிப்பிடுவதன் மூலம் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 276,000 தொகையான விலையினை கொடைமுனைந்த மனுதாரர்க்கு விலைமனு வழங்கப்பட்டிருந்தது. அதிஉத்தம விலை கொடைமுனைவின் பார்வையில், விலைமனுவினை வழங்குகையில் ரூபா 526,500 நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.3.1 அதிஉத்தம வினைத்திறனுடன் அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படாமை**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 23,397,342 ஐ ஏற்படுத்துவதன் மூலம் கநோவத்த மருத்துவ பூங்காவிற்கான இரண்டு மாடி விரிவுரையாளர் மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் முதல் 08 மாதங்கள் காலப்பகுதியின் போது ஆறு பயிற்சி அமர்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. ஆகையினால், திணைக்களத்தின் வகிப்பாகத்தின் வெளிப்படுத்தலுக்கு இந்த இரண்டு மாடிக் கட்டிடம் அதிஉத்தமமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 7,418,000 தொகையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் 2017 ஆம் ஆண்டில் வதிவிட பயிற்சி பாடநெறிகளினைப் நடாத்துவதற்கு மீகலாவயில் ஹரித்த பியஸ பயிற்சி நிலையத்திற்கு விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ரூபா 700,525 நேரிட்டதன் மூலம் 2017 மே இல் வீட்டு உபகரண வகைகள் மற்றும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், வதிவிட பயிற்சி பாடநெறிகளினை நடாத்துவது தொடர்பில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப்பயன்பாடுடையதாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி<br>ரூபா. | விளைவற்ற காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகனங்கள் | 04 | இனங்காண முடியவில்லை | 02 மாதங்கள் தொடர்பு |
| (ii) | கட்டிடங்கள் | 01 | 7,418,000 | 01 வருடம் |
| (iii) | வீட்டு உபகரண வகைகள் | - | 700,525 | 08 மாதங்கள் |

**2.4 கடமைகளும் பொறுப்புக்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பாதீட்டு எல்லையினை மிகைத்து மேற்கொள்ளப்பட்ட கடமைகள்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராது 09 நோக்க விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 76.8 மில்லியன் ஏற்பாடுகளினை மிகைத்து ரூபா 4.8 மில்லியன் கடமைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) பொறுப்புக்களினை வெளிப்படுத்தாமை**

2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது 15 சந்தர்ப்பங்களில் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ரூபா 413,805 தொகையான பொறுப்புக்கள் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கூற்றில் அந்தப் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பூங்காவினை சுற்றி பாதுகாப்பு வேலியொன்றினை நிர்மாணத்திற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 960,660 இற்கு நூறு பாதுகாப்பு வலை சுருள்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 16 வரையிலும் பயன்படுத்தப்பட்டிராது பூங்காவின் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**2.6 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் திகதியான, 2017 ஒக்தோபர் 10 வரையிலும் ஹக்கல பூங்காவிற்குச் சொந்தமான 03 இருக்கைகளுடனான 02 கோல்ப் கார்கள் மற்றும் 07 இருக்கைகளுடனான 02 கோல்ப் கார்கள் தொடர்ந்தும் காணப்பட்டது. முன்னைய ஆண்டு மாதங்களுடன் தொடர்பான வருமானத்துடன் 2017 செப்தெம்பர் வரையிலான கோல்ப் கார்களின் ஓட்டங்களிலிருந்து பெறப்பட்ட மாதாந்த வருமானத்தை ஒப்பிடுகையில், 34 சதவீதத்திலிருந்து 82 சதவீதம் வரையான வீச்சில் மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்திற்காக உழைக்கப்பட்ட வருமானம் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவ தாவர வகைகளினை இனங்காணுதல், ஆயுர்வேத மருத்துவ மாணவர்கள் மற்றும் பல்வேறு கற்கைகளுக்கு வருகின்ற கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் கற்கைகளுக்கு வசதியளிப்பதற்கு தாவரங்களினை சரியாக பெயரிடல், விளம்பரப் பலகைகளினை தயாரித்தல், மூலிகைப்பூங்காக்களில் தாவர மாதிரிகளின் தயாரிப்பு, நீர்கலந்த ஊடகத்தில் பாதுகாக்கப்பட்ட தாவரங்களின் பகுதிகளினை காட்சிப்படுத்துவதற்கு மற்றும் மருத்துவ தாவரங்களின் உலர்ந்த மருத்துவ பாகங்களினை காட்சிப்படுத்துவதற்கு மற்றும் கனவத்த மருத்துவ பூங்காவினுள் வளர்க்க முடியாததாகக் காணப்பட்ட மருத்துவ தாவரங்களினை புகைப்படங்களினூடாக பார்ப்பதற்கு படங்களினை சேகரிப்பதற்கு ஏற்பாடுகளினை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளுக்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 சனவரி 01 இலிருந்து தாவரங்களின் விற்பனைகள் தொடர்பில் விலை மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் 01 இலிருந்து மீகலாவ ஹரித பியஸ பயிற்சி நிலையத்தின் அமுல்படுத்தல் காரணமாக 2017 சனவரி 01 இலிருந்து ஆகஸ்ட் 01 வரை தாவரங்களின் விற்பனைகளிலிருந்து ரூபா 12,380 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாடுகளினை மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகளின் போது திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பான விபரங்கள், அவற்றின் மீதான பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் மற்றும் கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழும் | 226.95 | 208.29 | 18.66 | 8.22 |
| | மூலதனம் | 598.15 | 424.44 | 173.71 | 29.04 |
| | மொத்தம் | 825.10 | 632.73 | 192.37 | 23.31 |
| 2014 | மீண்டெழும் | 236.54 | 236.46 | 0.08 | 0.03 |
| | மூலதனம் | 425.30 | 419.55 | 5.75 | 1.35 |
| | மொத்தம் | 661.84 | 656.01 | 5.83 | 0.88 |
| 2015 | மீண்டெழும் | 337.21 | 332.79 | 4.42 | 1.31 |
| | மூலதனம் | 369.30 | 349.22 | 20.08 | 5.44 |
| | மொத்தம் | 706.51 | 682.01 | 24.49 | 3.47 |
| 2016 | மீண்டெழும் | 349.52 | 348.72 | 0.79 | 0.23 |
| | மூலதனம் | 287.80 | 285.92 | 1.88 | 0.65 |
| | மொத்தம் | 637.32 | 634.64 | 2.68 | 0.42 |
| 2017 | மீண்டெழும் | 364.69 | 358.28 | 6.41 | 1.76 |
| | மூலதனம் | 300.05 | 297.56 | 2.49 | 0.83 |
| | மொத்தம் | 664.74 | 655.84 | 8.90 | 1.34 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல்**

மீளாய்வாண்டில் 02 மூலதன நோக்கவிடயங்களுக்கு மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் ஏற்பாடுகளினைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாடுகளின் 10 சதவீதம் தொடக்கம் 21 சதவீதம் வரை காணப்பட்டிருந்தது.

## 2.8 மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம்

2017 ஆம் ஆண்டிற்கு 20.03.02.19 ஆம் வருமான குறியீட்டிற்கு திணைக்களத்தினால் ரூபா 900 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 791 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 88 சதவீதமாக காணப்பட்டது.

## 2.9 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 32201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 29.00 | 29.00 | 17.50 | 18.80 | 83.00 | 68.86 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், ரூபா 675,596 கூட்டுத்தொகையான, இடமாற்றஞ்செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர, அந்த திகதியில் உள்ளவாறு வருமதியாகவுள்ள மீதிகள் தொடர்ந்தும் காணப்பட்டன. 01 வருடம் தொடக்கம் 05 வருடங்கள் வரையான வீச்சில் மிகையான காலப்பகுதிக்கு அந்த வருமதியான மீதிகள் தொடர்ந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வருமதியாகவுள்ளக கடன் மீதிகளினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதியத்திற்கு ரூபா 294 மில்லியன் தொகையொன்று திணைக்களத்திற்கு ஏற்பட்டது. அதற்கமைய, மூலதன செலவினம் ரூபா 467,118 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 34 | 16 | 18 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 189 | 130 | 59 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 10 | 04 | 06 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 741 | 480 | 261 |
| | **மொத்தம்** | **974** | **630** | **344** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முறையான அங்கீகாரமின்றி சேவையிலுள்ள தொழிலாளர்களினைப் பயன்படுத்தல்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தோட்டங்களின் நாள் வேலைகளுக்கு குறித்த நோக்க அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூபா 14 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்**

ஊழியர்களினை தொடர்ச்சியாக பயிற்சியளிப்பதற்கு தேவைப்பாடொன்று காணப்படுகின்றமையால், ஒவ்வொரு பதவி மற்றும் விடயங்களுடன் தொடர்புடைய பயிற்சியளித்தல் தேவைப்பாடுகள் இனங்காணப்படல் வேண்டும். இருப்பினும், அந்த தேவையினை எதிர்கொள்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.